மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடலூரில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கிட்டத்தட்ட, இப்போது 3,112 அரசு வாடகை குடியிருப்புகள் காலியாக இருக்கின்றன. சென்னை தலைநகரத்தில் மட்டும்தான் அரசு ஊழியர்களுக்கு வாடகை வீடுகள் பற்றாக்குறையாக உள்ளன. மற்ற இடங்களில் வாடகைக் குடியிருப்புகள் காலியாகவே இருக்கின்றன. அதற்குக் காரணம் அரசு அலுவலர்களுக்கு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படும் கடன் தொகையை ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்திக் கொடுத்ததால், புதிதாக வீடுகள் வாங்கும் திறன் அரசு ஊழியர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. மேலும், ஆறாவது ஊதியக் கமிஷனில் வீட்டு வாடகைப்படி உயர்த்தி கொடுத்ததனால், அரசு ஊழியர்கள் தனியார் வீடுகளையே நாடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி, அங்கு அரசு ஊழியர்கள் எத்தனை பேர் பணிபுரிகின்றார்கள், அவர்களுக்கு வீடுகள் அவசியம் தேவைப்படுகிறதா என்பதை ஆய்வுசெய்து, தேவைப்படின் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவின் வழிகாட்டுதலின்படி நடைபெறுகின்ற அரசு வீடுகள் கட்டிக் கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

33—

இரயில்வே மேம்பாலம்

***34355—திரு. இரா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறிஞ்சிப்பாடி தொகுதி, கடலூர்-சிதம்பரம் நெடுஞ்சாலையிலுள்ள பூண்டியாங்குப்பத்தில் புதிய இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

[2015 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிஞ்சிப்பாடி தொகுதி, கடலூர்-சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலை எண் 45A சாலையில் இரயில்வே கடவு எண் 176-க்கு மாற்றாக சாலை மேம்பாலம் அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானத்தில், தர்மத்தில், தளராத தாயன்பில் என்றும் சிறந்து விளங்குகின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தான் பிறந்த நாளில் விழாக்கள் வேண்டாம், ஏழைகளுக்கும், இல்லாதவர்களுக்கும் உதவுங்கள் என்று சொல்லும், வள்ளலின் வாரிசு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நீண்ட ஆயுளோடும், நிறைந்த புகழோடும் வாழ இறைவனை வேண்டுகிறேன்.

கடலூர், குறிஞ்சிப்பாடி தொகுதி, கடலூர் மற்றும் சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிற மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலிருந்து தொப்பம்பட்டி வழியாக தாராபுரம் செல்கின்ற சாலையில், பழனி நகரில் இரயில்வே கடவு அமைந்துள்ளது. தமிழகத்தில் மிகப் பிரசித்திபெற்ற பழனி முருகன் கோயில் அங்கு அமைந்திருப்பதால் அந்தக் கோயிலுக்கு, குறிப்பாக

2015 பிப்ரவரி 20]

சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளிலிருந்து வருகின்ற பக்தர்கள் பாதயாத்திரையாகவும், வாகனங்களிலும் அதிகமாக வருகின்றார்கள். அடிக்கடி அங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எடப்பாடி தொகுதியிலிருந்து அதிகமாக காவடிகள் ஆண்டுதோறும் பழனி கோயிலுக்கு வருகின்றன. அதைக் கருத்தில்கொண்டும், பொதுமக்கள் நலன் கருதியும் சிறப்புக் கவனம் எடுத்து, அங்கு இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று சொன்னால், 24 மணி நேரமும், அதாவது ஒரு நாளைக்கு அந்த இரயில்வே கடவில் செல்கின்ற இரயில்களின் எண்ணிக்கை மற்றும் அங்கு இரயில்கள் செல்கின்றபோது கடவுகள் மூடப்படுகின்றபொழுது, இருபக்கங்களிலும் இருக்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையையும் கணக்கிட்டு, அவ்வாறு கணக்கிடுகின்றபொழுது ஒரு இலட்சத்திற்கு மேல் அலகுகள் இருந்தால்தான், அங்கு இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு மத்திய இரயில்வே துறை இசைவு அளிக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கின்ற முக்கியத்துவத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த இரயில்வே கடவில் ஒரு இலட்சம் அலகிற்கு மேல் இருக்குமேயானால் அந்தப் பகுதியிலே மேம்பாலம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.